*கவனிக்க.- 2021.08.27 ஆந் திகதிய 2243 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I1 பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2244 - 2021 සැප්තැම්බර් මස 03 වැනි සිකුරාදා - 2021.09.03

*2244 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1066 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2021, செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1065- B82266 - 5,403(2021/09)

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## மத்திய மாகாண அரச சேவையின் உள்ளூராட்சி நிறுவனங்களில் நூலகர் சேவையின் (III ஆம் வகுப்பு) பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு - 2021

01. மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி நிறுவனங்களின் பொதுநூலகங்களில் நூலகர் சேவையின் III ஆவது வகுப்பில் நிலவும் பதவி வெற்றிடங்களுக்கான மத்திய மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டுள்ள ஆண் / பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

02. இந்தப் பதவிகள் நிரந்தரமானவை / அரசாங்கம் அறிவிப்புச் செய்யும் ஓய்வூதிய முறைமைக்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

03. சம்பள முறைமை : பொ.நி.சு. 03/2016, MN 3-2016

சம்பள அளவுத்திட்டம் : ரூ. 31,040.00 – 10x445 – 11x660 – 10x730 – 10x750 – ரூ. 57,550.00

04.

4. 1. **அடிப்படைத் தகைமைகள் :-**

(i) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரிகள் மத்திய மாகாணத்துக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியை அண்மித்த 03 வருடகால நிரந்தர வதிவை நேர்முகத் தேர்வின் போது உறுதிப்படுத்துதல் வேண்டும்.)

(iii) விண்ணப்பதாரிகள் குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றின் மூலம் தண்டனை விதிக்கப்படாதவராக இருத்தல் வேண்டும்.

(iv) சிறந்த நன்னடத்தையையும் நல்ல தேகாரோக்கியத்தையும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

4.2. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :-**

4.2.1. திறந்த ஆட்சேர்ப்பு :

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் / விண்ணப்பம் கோரப்படும் திகதியன்று மத்திய மாகாணத்தில் 03 வருட நிரந்தர வதிவைக் கொண்டிருத்தல்.

மற்றும்

(ii) விண்ணப்பம் கோரப்படும் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல்.

மற்றும்

(iii) சிங்களம் / தமிழ் / ஆங்கிலம் ஆகிய மொழிகள் 03 இல் ஒன்றுக்கும், கணிதம் மற்றும் வேறு இரண்டு பாடங்களுக்கும் திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். அவற்றுள் 05 பாடங்கள் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல். அத்துடன் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஏதேனும் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

(iv) (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் நூலக விஞ்ஞானம் பற்றிய மூன்று வருட டிப்ளோமா பாடநெறியில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

(ஆ) இலங்கை நூலகச் சங்கத்தில் நூலக விஞ்ஞானம் பற்றிய மூன்று வருட டிப்ளோமா பாடநெறியில் சித்தியடைந்திருத்தல்.

4.2.2. மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு :

(i) மத்திய மாகாண உள்ளூராட்சி நிறுவனமொன்றின் நூலக உதவியாளர் / நூலக ஊழியர் பதவியில் நிரந்தர மாக்கப்பட்டுள்ளதுடன் குறித்த பதவியில் 10 வருட முனைப்பான சேவைக்காலத்தைக் கொண்டிருத்தல். மற்றும் விண்ணப்பம் கோரப்படும் திகதியை அண்மித்த 05 வருடங்களில் திருப்தியான சேவைக்காலத்தைக் கொண்டிருத்தல். (இதற்கென உச்ச வயதெல்லை பொருந்தாது.)

மற்றும்

(ii) (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் நூலக விஞ்ஞானம் பற்றிய மூன்று வருட டிப்ளோமா பாடநெறியில் முதலாம் ஆண்டில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

(ஆ) இலங்கை நூலகச் சங்கத்தில் நூலக விஞ்ஞானம் பற்றிய மூன்று வருட டிப்ளோமா பாடநெறியில் முதலாம் ஆண்டில் சித்தியடைந்திருத்தல்.

குறிப்பு :- மேலே 4.2.1 மற்றும் 4.2.2 இன் கீழான அனைத்து தகுதிகளையும் விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்குள் பூர்த்தி செய்திருத்தல்.

**முனைப்பான சேவைக்காலம் என்பது**: அரைச் சம்பளத்துடன் அல்லது சம்பளமற்ற சேவைக்காலம் அல்லது சேவையில் முறிவு ஏற்பட்டிருந்த ஏதும் காலம் / காலங்கள் ஆகியவற்றைக் கழித்தபின் எஞ்சியுள்ள, மத்திய மாகாண சபையின் தேவைகளுக்கென மற்றும் / அல்லது மத்திய மாகாண சபையின் பதவிக்குரிய வேதன ஏற்றங்களை உழைத்துப் பெற்றுள்ள, மற்றும் அதற்கமைய வேதனங்களைப் பெற்றுத் தமக்குச் சாட்டப்பட்டுள்ள கடமைகளில் உண்மையாகச் சேவையாற்றிய காலப்பகுதியைக் குறிக்கும்.

**திருப்தியான சேவைக்காலம் என்பது**: உரிய காலத்துக்குள் பொதுவான அடைவு மட்டத்தைக் கொண்டுள்ளதும், இடைநிறுத்தம் அல்லது தடுத்து நிறுத்தம் அல்லது பிற்போடுதல், அல்லது துண்டிப்புச் செய்யாது உரிய முதல் 05 ஆண்டுகளுக்கு வேதன ஏற்றங்களை உழைத்துப் பெற்றும், மற்றும் எச்சரிக்கை தவிர்ந்த வேறேதும் ஒழுக்காற்றுத் தண்டனைகளுக்கு உட்பட்டிராததுமான சேவைக்காலத்தைக் குறிக்கும்.

4.3. **ஆட்சேர்ப்பு முறை** :

நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் 70% திறந்த போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலும் 30% மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுவதுடன், மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் கீழ் தகுதி பெறுவோரிடையே போதுமான எண்ணிக்கை காணப்படாதவிடத்து, அந்த எண்ணிக்கையும் திறந்த போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் கீழ் தகுதி பெறுவோரது தொடரொழுங்கிற்கு அமைய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் கீழ் முன்னுரிமைப்படி புள்ளிகள் பெறும் தொடரொழுங்கின்படி, நேர்முகத் தேர்வுக்குழுவொன்றின் மூலம் தகைமைகள் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர், ஆட்சேர்ப்புக்கான அரசின் கொள்கைகள் மற்றும் நியமங்களைப் பின்பற்றி வெற்றிடங்கள் நிரப்பப்படும். நேர்முகத் தேர்வுக்கெனப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. 1990, மாச்சு 09 அன்று வெளியிடப்பட்ட அரச நிருவாக சுற்றுநிருபம் 15/90 இற்கமைய மாவட்ட மக்கள் தொகைக்கேற்ப நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

4.3.1. பாடங்கள்

போட்டிப் பரீட்சையின் போது பின்வரும் பாடங்களைக் கொண்ட பரீட்சை நடாத்தப்படும்.

| | | |
|---|---|---|
| நூலக விஞ்ஞானம் | : 03 மணி நேரம் | – 100 புள்ளிகள் |
| பொது உளச்சார்பு | : 01 மணி நேரம் | – 100 புள்ளிகள் |
| பொது அறிவு | : 01 மணி நேரம் | – 100 புள்ளிகள் |

4.3.1.1 திறந்த போட்டிப் பரீட்சைக்கான பாடத்திட்டம்

| விடயம் | விடயப் பரப்பு | காலம் (மணித்தியாலம்) | முழுப் புள்ளிகள் |
|---|---|---|---|
| நூலக விஞ்ஞானம் | 1. நூலகங்களும் நூலகத்துவமும்<br>(அ) நூலகங்களும் நூலக வரலாறும்<br>(ஆ) நூலக அங்கத்தவர்களின் கடமைகள்<br>(இ) எழுத்துக்கலை மற்றும் புத்தகங்கள் உள்ளடங்களானதுமான எழுதப்பட்ட ஊடகங்களின் ஆரம்பமும், பரிணாம வளர்ச்சியும்.<br>(ஈ) நூலகர் சங்கம்<br>(i) இலங்கை நூலகர் சங்கம்<br>(ii) அமெரிக்க மற்றும் பிரித்தானிய நூலகர் சங்கங்கள்<br>(உ) நூல் நிலைய வகைகள்<br>(i) பாடசாலை நூலகங்கள்<br>(ii) அரச அமைச்சுக்கள், திணைக்கள, கூட்டுத்தாபனங்கள் முதலான நிறுவனங்களது நூலகங்கள்<br>(iii) பொது நூலகங்கள்<br>(ஊ) நூலக குழுக்கள்<br>(எ) நூலகங்களை பேணுதல் (Conservation) மற்றும் பாதுகாத்தல் (Preservation)<br><br>2. அறிவையும் தகவல்களையும் ஒழுங்கமைத்தல்<br>(அ) நூல்களை வகைப்படுத்தலின் நோக்கங்களும் நன்மைகளும்<br>(ஆ) நூல்களை வகைப்படுத்தலின் அடிப்படை<br>(இ) தசம வகைப்படுத்தல்<br>(ஈ) நூலக பட்டியலாக்கத்தின் குறிக்கோள்கள்<br>(உ) AACR 2 பட்டியலாக்கலின் சட்ட கோவைகள்<br>(ஊ) நூல்களை குறித்தல் மற்றும் நூல்கள் பற்றிய விபரங்கள்<br>(எ) பட்டியலாக்கல் வகைகள்<br><br>3. நூல் நிலைய வளங்களும் தகவல் சேவையும்<br>(அ) பலவகையான நூலக வளங்கள்<br>(ஆ) நூலக வளங்களை தெரிவு செய்தல் செயற்பாடுகள்<br>(இ) ரசீது மற்றும் ரசீது செயற்பாடுகள்<br>(ஈ) செயலாக்கம்<br>(ஊ) இருப்புக்களது மீளாய்வும் அகற்றும் செயற்பாடும்<br><br>4. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (Information Communication Technology)<br>(அ) நூலகங்களில் கணினிகளைப் பயன்படுத்தல் | 03 மணித்தியாலம் | 100 புள்ளிகள் |
| நுண்ணறிவுத் தேர்வு | சொற்கள், எண்கள் மற்றும் உருவ வடிவில் தரப்படும் பிரச்சினைகள் தொடர்பிலான பரீட்சார்த்தியின் தீர்மானங்களையும் பதிலளிப்புக்களையும் கொண்டு அவற்றை கிரகிப்பதிலும் அளவிடுவதிலும், காலம் மற்றும் அவகாசத்திற்கு இடையிலான தொடர்பினை உணர்ந்து கொள்வதிலும் பரீட்சார்த்திக்கு உள்ள ஆற்றலையும் புத்திக்கூர்மையையும் அளவிடுவது இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. | 01 மணித்தியாலம் | 100 புள்ளிகள் |
| பொது அறிவு | தேசிய பிராந்திய அத்துடன் அனைத்துலக ரீதியான பல அமைப்புகளைப் போன்று எமது சமூகத்தில் நிலவும் சமூக, கலாசார, கல்வி, அரசியல், பொருளாதாரம் அத்துடன் ஏனைய காரணிகளைப் பற்றியும் நூலக விடயம் மற்றும் நூலகத்துறை மீதான பரீட்சார்த்தியின் பொது அறிவு மற்றும் விழிப்புணர்வை பற்றியும் மதிப்பிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. | 01 மணித்தியாலம் | 100 புள்ளிகள் |

*4.3.1.2. மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான பாடத்திட்டம்*

| *விடயம்* | *விடயப் பரப்பு* | *காலம் (மணித்தியாலம்)* | *முழுப் புள்ளிகள்* |
|---|---|---|---|
| நூலக விஞ்ஞானம் | 1. நூலகங்களும் நூலகத்துவமும்<br>(அ) நூலகங்களும் நூலக வரலாறும், நவீன மற்றும் புராதன உலகத்தின் பிரதான நூலகங்கள்.<br>(ஆ) எழுத்துக்கலை மற்றும் புத்தகங்கள் உள்ளடங்கலானதுமான எழுதப்பட்ட ஊடகங்களின் ஆரம்பமும், பரிணாம வளர்ச்சியும்.<br>(இ) அச்சிடற் தொழினுட்பத்தின் ஆரம்பமும் விரிவாக்கமும், நூலக சமுக அபிவிருத்தி விடயங்கள் மீதான செயல்விளைவுகளும்.<br>(ஈ) நூல் நிலைய வகைகள் :<br>விசேட நூலகங்கள்<br>(i) அரச அமைச்சுக்கள், திணைக்கள, கூட்டுத்தாபனங்கள் முதலான நிறுவனங்களது நூலகங்கள், ஆராய்ச்சி நூலகங்களது கட்டமைப்பு, கருமங்கள் மற்றும் பணிகள்.<br>(ii) கல்விசார் நூலகங்கள்<br>பல்கலைக்கழகங்கள், ஏனைய உயர்கல்வி நிறுவனங்கள் சார்ந்த நூலகங்களின் கட்டமைப்பு, கருமங்கள் மற்றும் பணிகள்<br>(iii) பாடசாலை நூலகங்கள்<br>(iv) பொது நூலகங்கள்<br>(v) பிரிவென நூலகங்கள் மற்றும் துறவிமட /சமய நிறுவனங்களின் நூலகங்கள்<br>(உ) நூலகக் குழுக்களின் கட்டமைப்பு, தேவைப்பாடு முக்கியத்துவம் மற்றும் கருமங்கள்<br>(ஊ) நூலக தொழிலுக்குரிய கற்றறிந்தோர் தொழில் அமைப்புக்கள் மற்றும் அவற்றின் கருமங்கள், தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் (இலங்கை/இந்தியா/அமெரிக்கா/பிரித்தானியா)<br>(எ) நூல் நிலையக் கட்டிடங்களின் திட்டமிடலின் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்/தற்போதுள்ள கட்டடமொன்றில் நூலகம் ஒன்றைத் தாபித்தல்/ அமைத்தல்/ அல்லது மேம் படுத்துதல்<br>(ஏ) நூலகப் பொருட்களைப் பராமரித்தல், பேணிப் பாதுகாத்தல் (Conservation) மற்றும் காப்பீடு (Preservation)<br>(ஐ) இடர்களும் (Disasters) மற்றும் இடர் முகாமைத்துவமும் (Disaster Management)<br><br>2. அறிவையும் தகவல்களையும் ஒழுங்கமைத்தல்<br>(அ) நூல்களை வகைப்படுத்தலின் நோக்கங்களும் நன்மைகளும்<br>(ஆ) இலங்கை நூலகங்களில் கையாளப்படும் பிரதான பகுப்பாக்கத் திட்டங்கள் வீதசதமான பகுப்பாக்கத் திட்டங்கள், சர்வதேச தசமதான பகுப்பாக்கத் திட்டங்கள்<br>(இ) நூலக பட்டியலாக்கத்தின் குறிக்கோளும் ஆங்கிலோ அமெரிக்க பட்டியலாக்கல் சட்டக்கோவை (A ACR) முறையும்<br>(ஈ) நூல்களைப் பற்றிய விவரங்கள்<br>(உ) AACR 2 விதிமுறைகளைப் பயன்படுத்திப் பதிவுப்பட்டியல் தயாரித்தல்<br><br>3. நூல் நிலைய வளங்களும் தகவல் சேவையும்<br>(அ) பலவகையான நூலக வளங்கள்<br>(ஆ) சேர்ந்த அபிவிருத்திக் கொள்கையும் அதன் முக்கியத்துவமும்<br>(இ) நூலக வளங்களை தெரிவு செய்தல் அடங்கலான ஏற்புச் செயற் பாடுகள் :- | 03<br>மணித்தியாலம் | 100<br>புள்ளிகள் |

| விடயம் | விடயப் பரப்பு | காலம் (மணித்தியாலம்) | முழுப் புள்ளிகள் |
|---|---|---|---|
| | I. நூலக வளங்களைத் தெரிவு செய்தலின் கோட்பாடுகளும் மூலகங்களும்<br>II. ஏற்பு செயற்பாடுகள், தளக்கோளம் உட்பட பல்வகையான தொழில்நுட்பச் சேவைகள்<br>III. இருப்புக்களது மீளாய்வும் அகற்றும் செயற்பாடும்<br><br>(ஈ) வெளியீடு வெளியீட்டு உரிமையும், தடையும்<br>(உ) நடைமுறை விழிப்புணர்வுச் சேவைகள் (Current Awareness Service)<br>(ஊ) வாசகர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்<br>(எ) மக்கள் தொடர்பும் நூலகங்களுக்கான பிரசாரங்களும்<br><br>4. தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் (Information Communication Technology) :<br>(அ) நூலகங்களில் கணினிகளைப் பயன்படுத்தல் நூலக நடவடிக்கைகளின் போது தகவல் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவமும் பயன்பாடும் | | |
| நுண்ணறிவுத் தேர்வு | சொற்கள், எண்கள் மற்றும் உருவ வடிவில் தரப்படும் பிரச்சினைகள் தொடர்பிலான பரீட்சார்த்தியின் தீர்மானங்களையும் பதிலளிப்புக்களையும் கொண்டு அவற்றை கிரகிப்பதிலும் அளவிடுவதிலும், காலம் மற்றும் அவகாசத்திற்கு இடையிலான தொடர்பினை உணர்ந்து கொள்வதிலும் பரீட்சார்த்திக்கு உள்ள ஆற்றலையும் புத்திக்கூர்மையையும் அளவிடுவது இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. | 01 மணித்தியாலம் | 100 புள்ளிகள் |
| பொது அறிவு | தேசிய பிராந்திய அத்துடன் அனைத்துலக ரீதியான பல அமைப்புகளைப் போன்று எமது சமூகத்தில் நிலவும் சமூக, கலாசார, கல்வி, அரசியல், பொருளாதாரம் அத்துடன் ஏனைய காரணிகளைப் பற்றியும் நூலக விடயம் மற்றும் நூலகத்துறை மீதான பரீட்சார்த்தியின் பொது அறிவு மற்றும் விழிப்புணர்வை பற்றியும் மதிப்பிடுவது. இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. | 01 மணித்தியாலம் | 100 புள்ளிகள் |

பரீட்சையில் சித்தியடைவதற்கெனக் குறைந்தபட்சம் 40% புள்ளியை ஒவ்வொரு வினாத்தாளிலும் பெறுதல் வேண்டும். போட்டிப் பரீட்சைக்கென ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களது எண்ணிக்கையைப் பூரணப்படுத்தும் வகையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளது தொடரொழுங்கைக் கைக்கொண்டு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

4.3.2. மேற்காட்டிய 4.3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்கான பாடத்திட்டம் மத்திய மாகாண முதலமைச்சின் இணையத்தளத்தின் (www.cm.cp.gov.lk) ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

**05. விண்ணப்பிக்க வேண்டிய முறை:**

i. அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கமைய A4 (21 செ.மீ. x 29 செ.மீ.) அளவிலான தாளைப் பயன்படுத்தி விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்தல் வேண்டும். (இல. 01 முதல் 07 வரை முதற் பக்கத்திலும், 08 முதல் 10 வரை இரண்டாவது பக்கத்திலும், 11 முதல் 14 வரை மூன்றாவது பக்கத்திலும், இல. 15 நான்காவது பக்கத்திலும் அமையும் வண்ணம் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும்.)

ii. பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்களை 2021.10.04 ஆந் திகதிக்கு முன்னர் "மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், மாகாண சபை வளாகம், பல்லேகலை, குண்டசாலை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையிலும் உள்ளூராட்சி அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மத்திய மாகாண அரச சேவையின் நூலகர் சேவை தரம் III" எனக் குறிப்பிடல் வேண்டும்.

iii. விண்ணப்பிப்பது திறந்த போட்டி அடிப்படையிலா அல்லது மட்டுப்படுத்தப்பட்ட போட்டி அடிப்படையிலா என்பதை விண்ணப்பப்படிவத்தில் சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகளது விண்ணப்பப் படிவங்கள் உரிய நிறுவனத்தின் தலைவரூடாக முன் வைக்கப்படுதல் வேண்டும்.

iv. விண்ணப்பிக்கும் மாவட்டம் என விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவிட மாவட்டத்துக்கு உரிய குறியீட்டெண்ணைக் குறிப்பிடுதல் வேண்டும்.

கண்டி - 01 மாத்தளை - 02 நுவரெலியா - 03

v. உரிய மாதிரிப்படிவத்தின்படி அமையாத விண்ணப்பங்கள் மற்றும் சரியான, தெளிவான கையெழுத்துக்களைக் கொண்டிராத மற்றும் கோரப்படும் இறுதித் தினத்தன்று ஆட்சேர்ப்புக்கான அடிப்படைத் தகைமகைளைக் கொண்டிராத மற்றும் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குள் அமையாத, பூரணமற்ற, தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் எதுவித முன்னறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் தபாலில் அற்றுப்போதல், தாமதமாகுதல் பற்றி மத்திய மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் வகைகூற மாட்டாது.

vi. விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையெழுத்தை அரசாங்க பாடசாலையின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம் பெற்ற அலுவலர், பொலிஸ் சேவையில் உயர் பதவி வகிப்போர் அல்லது ரூபா 498,960.00 அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த சம்பளத்தை கொண்ட அரச அலுவலர் ஒருவர் ஆகியோருள் ஒருவர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

குறிப்பு : பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு தவிர்ந்த எந்தவொரு ஆவணத்தையும் அவற்றின் பிரதியையும் விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் கூடாது.

06. **பரீட்சைக் கட்டணம்**: பரீட்சைக் கட்டணமாக அறுநூறு ரூபாவை (600.00) மத்திய மாகாணத்தின் பிரதம செயலாளரது 20-03-02-13 என்ற வருமானத் தலைப்பில் வரவிலிட்டு மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலும் வைப்புச் செய்த பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி அனுப்புதல் வேண்டும். இந்தத் தொகையைச் செலுத்திய பற்றுச்சீட்டு தவிர்ந்த வேறெந்த அமையத்திலும் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டோ, காசுக்கட்டளையோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்பட மாட்டாது என்பதைக் கவனித்தல் வேண்டும்.

07. **சேவை நிபந்தனைகளும் நியமங்களும்**:

i. தாபனக்கோவை, நிதிப் பிரமாணங்கள், மாகாணசபை நியதிச் சட்டங்கள், திணைக்களக் கட்டளைகள் மற்றும் காலத்துக்குக் காலம் அரசு மற்றும் மத்திய மாகாண சபையினால் விடுக்கப்படும் கட்டளைகளுக்கும் உட்படுதல் வேண்டும்.

ii. பொதுநிருவாகச் சுற்றறிக்கை இல. 18/2020 மற்றும் அதனுடன் இணைந்ததாக வெளியிடப்படும் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கமைய அனைத்து அலுவலர்களும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மொழிமூலத்துக்கு மேலதிகமாக அடுத்த அரசகரும மொழி பற்றிய தேர்ச்சியை சேவையில் இணைந்த 03 வருடகாலத்துக்குள் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அரசகரும மொழிகள் திணைக்களம் நடாத்தும் மொழிகள் பாடநெறிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். நியமனத் திகதியிலிருந்து 03 வருட காலத்துக்குள் குறித்த இரண்டாம் மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளாத அலுவலர்களது வேதன ஏற்றங்கள், தகைமையைப் பெற்றுக் கொள்ளும் வரையில் இடைநிறுத்தம் செய்யப்படும்.

iii. இந்தப் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து நியமிக்கப்பட்ட நிலையத்தில் 03 வருடங்கள் கட்டாயச் சேவைக்காலத்துக்கு உட்படுதல் வேண்டும். அக்கால எல்லை முடியும் வரை இடமாற்றம் செய்வது தொடர்பாக எந்த வேண்டுகோளும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

iv. மத்திய மாகாணத்தின் எந்தவொரு உள்ளூராட்சி அமையத்தின் பொதுநூலகத்திலும் பணியாற்ற இணங்குதல் வேண்டும்.

08. **பரீட்சை நிலையம்** : இந்தப் பரீட்சை கண்டி நகருக்குள் நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் முன்வைத்தல் வேண்டும்.

09. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்** : பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர் யாவரும் பரீட்சை நிலையத்தில் தமது ஆளடையாளத்தைப் பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் நிரூபித்தல் வேண்டும். அதற்கெனப் பின்வருவனவற்றிலொன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை
(ஆ) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு
(இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

10. **பரீட்சையை நடத்தல்** :- மத்திய மாகாண சபையின் அரச சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் நடாத்தப்படும்.

11. இந்தப் பரீட்சையைப் பிற்போடுதல் அல்லது இரத்துச் செய்தல் அல்லது நடாத்தியதன் பின்னர் தெரிவுகளை இரத்துச் செய்தல்/ செய்யாது விடுதல் அல்லது வெற்றிடங்கள் எண்ணிக்கை பற்றிய இறுதி முடிவு மற்றும் அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் பற்றிய இறுதித் தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரம் மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளருக்கு உண்டு.

12. ஆட்சேர்ப்பின் போது ஆட்சேர்பின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கும் அதிகாரம் மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு உண்டு.

13. எவரேனும் விண்ணப்பதாரி ஒருவரிடம் தகைமைகள் இல்லாதிருந்தமை, நியமனத்துக்கு முன்னர் எப்போதேனும் கண்டுபிடிக்கப்பட்டால் அபேட்சகத் தன்மை இரத்துச் செய்யப்படும். மேலும் தெரிந்துகொண்டு வேண்டுமென்றே பொய்யான தகவல்கள் முன்வைக்கப்பட்டுள்ளமை அல்லது சரியான தகவல்கள் வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டால் பதவியிலிருந்து பணிநீக்கம் செய்யப்படும்.

எச்.எம்.எம்.யூ.பீ.ஹேரத்,
உள்ளூராட்சி ஆணையாளர்,
மத்திய மாகாணம்.

உள்ளூராட்சித் திணைக்களம்,
மத்திய மாகாணம்,
2021, ஓகத்து 20.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாண அரச சேவையின் உள்ளூராட்சி அமையங்களது நூலகர் சேவையின்**
**(III ஆம் வகுப்பு) பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு – 2021**

(அலுவலகப் பாவனைக்கு)

விண்ணப்பிக்கும் மாவட்டமும் குறியீட்டு இலக்கமும்:

விண்ணப்பிக்கும் பரீட்சை : திறந்த ☐ மட்டுப்படுத்தப்பட்ட ☐
(உரிய கூட்டில் ✓ அடையாளமிடுக)

வதிவிட மாவட்டம்: ☐ (கண்டி - 01, மாத்தளை - 02, நுவரெலியா - 03)

01. i. முதலெழுத்துக்களுடன் பெயர் :

…………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) PEERA A.B.C.

ii. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள்: (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :
…………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………

iii. முழுப் பெயர் (சிங்களத்தில் / தமிழில்) :

……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………

02. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

03. i. அனுமதிப்பத்திரம் பத்திரம் அனுப்பி வைக்க வேண்டிய முகவரி :

……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………

ii. நிரந்தர வதிவு முகவரி :……………………………………………………………………………
……………………………………………………………………………………………………

iii. நிரந்தர வதிவு மாவட்டம் :……………………………………………………………………………

iv. பிரதேச செயலாளர் பிரிவு : ……………………………………………………………………………

v. மத்திய மாகாணத்துக்குள் வசிப்பது எப்போதிருந்து?:
……………………………………………………………………………………………………

04. தொலைபேசி இல. : …………………………………………

05. ஆண் / பெண் நிலை : ☐ (உரிய எழுத்தை கூட்டினுள் எழுதுக.)
(ஆண் - M பெண் - F

06. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்: ☐ (கூட்டினுள் உரிய எழுத்தை எழுதுக )

சிங்களம் - S தமிழ் - T ஆங்கிலம் - E

07. i. பிறந்த திகதி : ☐☐☐☐ ☐☐ ☐☐

ii. 2021.09.03 ஆந் திகதியன்று வயது : வருடங்கள் : ................. மாதங்கள் : ................ நாட்கள்: ...........

08. பிரசாவுரிமை : ............................................................

09. கல்வித் தகைமைகள்:

i. க.பொ.த. (சா.த.) பரீட்சை :

ii. வருடம் : .................. சுட்டிலக்கம் : ...................... வருடம் : .................... சுட்டிலக்கம் : .........................

| தொடர் இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

| தொடர் இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

iii. க.பொ.த. (உ.த.) பரீட்சை : வருடம் :................. சுட்டிலக்கம் :.............................

| தொடர் இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

iv. பெற்றுள்ள பட்டம் / டிப்ளோமா பற்றிய விபரம்:

| சித்தியடைந்துள்ள பட்டம் / டிப்ளோமா | பல்கலைக்கழகம் /நிறுவகம் | பட்டம் /டிப்ளோமா செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|
| | | |
| | | |

v. ஏனைய தொழில் தகைமைகள் :
.......................................................................................................
.......................................................................................................
.......................................................................................................

10\. i. நீங்கள் எப்பொழுதாவது குற்றச்சாட்டு ஒன்றின் பேரில் நீதிமன்றத்தினால் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா? ஆம் / இல்லை
.......................................................................................................

ii ஆம் எனின், விபரம் தருக:
.......................................................................................................

11\. நீங்கள் ஏற்கனவே அரச அல்லது மாகாண அரச சேவையில் உள்ளவரெனின் -
i. தற்போது வகிக்கும் பதவி : ........................................................................................
ii. அப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி : ..........................................................................
iii. சேவை நிலையத்தின் பெயரும் முகவரியும் : .........................................................................
.......................................................................................................................
.......................................................................................................................

12\. i. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் : ...................................
ii. பற்றுச்சீட்டு பெறப்பட்ட பிரதேச செயலகம்: ...............................................

| |
|---|
| பரீட்சை கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டினை கழன்றுவிடாதவாறு இங்கே ஒட்டவும். |

13\. இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் நான் அறிந்தவகையில் உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன். இந்த ஆட்சேர்ப்புக்கென விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய நான் வழங்கியுள்ள மேற்குறித்த விபரங்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால் நியமனத்துக்கு முன்னரோ பின்னரோ எனது அபேட்சகத்தன்மை இரத்துச் செய்யப்பட முடியும் என்பதனையும், நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால், பதவிநீக்கம் செய்வதற்கு உட்படுவேன் என்பதையும் நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

திகதி : ..................... ..........................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**14. கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி / செல்வி ........................................ என்பவர் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் இவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது எனவும், அதன் பற்றுச்சீட்டு சரியாக ஒட்டப்பட்டுள்ளது எனவும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

..............................................
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் : ...................................................................
பதவி :.................................
திகதி: .................................
(பதவி முத்திரையை இடவும்)

(விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையெழுத்தை அரசாங்க பாடசாலையின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம் பெற்ற அலுவலர், பொலிஸ் சேவையில் உயர் பதவி வகிப்போர் அல்லது ரூபா. 498,960.00 அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த சம்பளத்தை கொண்ட அரசாங்க அலுவலர் ஒருவர் ஆகியோருள் ஒருவர் தமது பதவி முத்திரையை இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.)

(ஏற்கனவே அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் இணைந்திருப்பவர்களுக்கு மட்டும் பொருந்தும்.)

**15. திணைக்களத் தலைவரது சான்றுரை :**

இந்த விண்ணப்பதாரியான திரு./ திருமதி/ செல்வி ........................................................................................ என்பவர் ............................................................... என்ற பதவியில் ................................ ஆந் திகதி முதல் ........................................................................................ என்ற இடத்தில் பணியாற்றுகின்றார் என்பதனையும், இந்த விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் அவரது தனிப்பட்ட கோவை / சேவை அறிக்கையுடன் சரிபார்க்கப்பட்டன எனவும், அவை உண்மையானவை எனவும், உறுதிப்படுத்துகின்றேன். அவரது பணியும் நடத்தையும் திருப்திகரமானவை என்பதுடன், அண்மித்த கடந்த 05 ஆண்டுக் காலத்துக்குள் அனைத்து சம்பள ஏற்றங்களும் உழைத்துப் பெறப்பட்டுள்ளதெனவும், மத்திய மாகாணத்தின் நூலகர் சேவையின் விண்ணப்பிப்பதற்கான அனைத்து தகைமைகளையும் கொண்டுள்ளார் எனவும் நியமனத்துக்கென அவர் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் இத்திணைக்களத்தில் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

........................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் : ............................................................................
பதவி :.............................................................................
திகதி: ............................................................................
(பதவி முத்திரையை இடவும்)

09-71

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித் தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரலலை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி கிடைக்கப் பெறாமை முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகர் என்ற முகவரிக்கு அறிவியுங்கள்**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து** மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு**.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்**.

**அட்டவணை - 2021**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 03.09.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.08.2021 |
| | | வெள்ளி | 10.09.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.08.2021 |
| | | வெள்ளி | 17.09.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.09.2021 |
| | | வெள்ளி | 24.09.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.09.2021 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 01.10.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.09.2021 |
| | | வெள்ளி | 08.10.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.09.2021 |
| | | வெள்ளி | 15.10.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.10.2021 |
| | | வெள்ளி | 22.10.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.10.2021 |
| | | வெள்ளி | 29.10.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.10.2021 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 05.11.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.10.2021 |
| | | வெள்ளி | 12.11.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.10.2021 |
| | | வெள்ளி | 19.11.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.11.2021 |
| | | வெள்ளி | 26.11.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.11.2021 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2021 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.